**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.32/2013 |
| Prosecution Witness | : | **அ.சா.4** |
| Name | : | **பெஞ்சமின்** |
| Father's/Husband Name: | : | பொன்னன் |
| Address : | : | 225 அன்பு நகர், நான்கு ரோடு, அரியலூர் மெயின் ரோடு, பெரம்பலூர் |
| Age | : | 70/2021 |

<u>தேதி: 15/09/2021</u>

முதல் விசாரணை : <u>சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.</u>

2008 ஆம் ஆண்டு நான் செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி தற்போது பணி ஓய்வு பெற்றுள்ளேன்.2008 ஆம் ஆண்டு அந்த அலுவலகத்தில் பணிபுரிந்த போது ஒரு நாளுக்கு சுமார் 30 முதல் 44 பத்திரங்கள் வரை பதிவிற்காக வரும். அவ்வாறு தாக்கல் செய்யப்படும் பத்திரங்களை சார்பதிவாளர் சரிபார்ப்பார். பின்பு தாக்கல் செய்த நபர்களின் பெயரை அழைக்கும்படி சார்பதிவாளர் உத்தரவிடுவார். அதன்படி நாங்களும் வெளியில் சென்று அவரது பெயரை உச்சரித்து கூப்பிடுவோம். அவ்வாறு எழுதி கொடுக்கப்பவர்கள், எழுதி வாங்குபவர்கள் சாட்சிகள் அனைவரும் உள்ளே செல்வார்கள். பத்திரம் எழுதிக் கொடுப்பவரிடம் சார்பதிவாளர் பத்திரத்தை எழுதிக் கொடுக்கிறீர்களா என்றும், பணத்தை பெற்றுக் கொண்டீர்களா எனவும் கேட்பார். அவர்கள்

சரியென ஒப்புக் கொண்டபின் பத்திரத்திற்கு ஒரு குறிப்பிட ஆவண எண்ணை வழங்குவார்கள். பின்பு பத்திரத்தை எங்களிடம் வழங்குவார்கள் பின்பு நாங்கள் அதில் அலுவலக முத்திரை மற்றும் கையொப்பமிடுபவர்களிடம் கையொப்பத்தை பெறுவோம். அவ்வாறு நாங்கள் எழுதிக் கொடுப்பவர், வாங்குபவர் மற்றும் சாட்சிகளிடம் கையொப்பங்களை பெறுவோம். பின்பு கையொப்பம் பெறப்பட்ட பத்திரங்களை சார்பதிவாளரிடம் வழங்கிவிடுவேன். பின்பு சார்பதிவாளர் கையொப்பமிட்டு, இளநிலை உதவியாளரிடம் அனுப்பிவிடுவார். ஒரு பவர் பத்திரம் ஏற்படுத்தியதில் பிழை ஏற்பட்டதாக காவல் துறையினர் என்னை ஏற்கனவே விசாரித்தனர். இத்தனை ஆண்டுகள் ஆகியுள்ளதால் அதுபற்றி தற்போது எனக்கு நினைவில்லை.

**குறுக்கு விசாரணை :**

நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் 37 ஆண்டுகளாக பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். பத்திரம் பதிவு செய்யப்படும் முன்பு சார்பதிவாளர் தரப்பினர்களை அழைத்து, பெயர் மற்றும் கையொப்பம் சம்மந்தமாக விபரங்களை கேட்டு தெரிந்து கொண்ட பின்பு தான் எங்களிடம் கொடுத்து அலுவலக முத்திரையிட சொல்வார் என்றால் சரிதான். என்ன சொத்து மற்றும் அந்த சொத்திற்கான கிரய தொகை ஆகியவற்றை கேட்டு தான் சார்பதிவாளர் கையொப்பமிடுவார் என்றால் சரிதான். அதன் பின்பு தான் தரப்பினர்களிடமும், சாட்சிகளிடமும் எங்களுடைய பதிவேட்டில் கையொப்பம் பெறுவோம் என்றால் சரிதான். அவ்வாறு கேட்கப்படும்போது, முறைகேடுகள் ஏதும் தெரியவந்தால் பத்திரம் பதிவு செய்யப்படாமல்

நிறுத்தப்படும் என்றால் சரிதான். நான் பணிபுரிந்த போது தவறான செய்கைகள் எதுவும் செய்து குறிப்பாணை ஏதும் வழங்கப்படவில்லை என்றால் சரிதான். முறைகேடுகள் எதுவும் நடக்கப்படாததால் தான் காவல் துறையினர் விசாரித்ததாக நான் கூறும் பவர் பத்திரமும் சார்பதிவாளர் பதிவு செய்தார் என்றால் எனக்கு அதுபற்றி நினைவில்லை.

(விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது).

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC.No.32/2013 |
| Prosecution Witness | : | **அ.சா.3** |
| Name | : | **பிச்சைமுத்து** |
| Father's/Husband Name: | : | அந்தோணி |
| Address : | : | 13 வது வார்டு, பெரியார் தெரு, பெரம்பலூர் |
| Age | : | 65/2021 |

**தேதி: 15/09/2021**

முதல் விசாரணை : சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது.

2008 ஆம் ஆண்டு நான் செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் அலுவலக உதவியாளராக பணியாற்றி வந்தேன். அப்போது பெல்லா சாவித்திரி என்பவர் பத்திரம் பதிவு செய்வதற்காக அவர்களது பத்திரத்தை அலுவலகத்தில் ஒப்படைத்திருப்பார்கள் என நான் நினைக்கிறேன். அந்த பத்திரத்தில் மூன்று கையொப்பங்கள் அவருடையது என்றும், இரண்டு கையொப்பங்கள் அவருடையது அல்ல என்றும் சார்பதிவாளரிடம் பெல்லா சாவித்திரி கூறினார். அதன் பின்னர் நான் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியில் அலுவலக பணத்தை கட்டுவதற்காக நான் சென்றுவிட்டேன். அதன் பின்பு நான் சாயங்காலம் தான் வந்தேன். ஏனென்றால் இரவு பணி தான் இருந்தது. அதனால் அதன் பின்பு எனக்கு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை :**

எப்போது பத்திரம் பதிவுக்காக கொடுக்கப்பட்டது என்றும், யார் அதில் கையொப்பமிட்டார் என்றும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எனது உயர்அதிகாரி இவ்வாறான புகார் எனக்கு வந்தது என குறிப்பிட்டதன் பேரில் தான் எனக்கு விபரம் தெரியும் என்றால் சரிதான். நான் வங்கிக்கு செல்வதற்காக எத்தனை மணிக்கு கிளம்பினேன் என்றால் காலை 11.00 மணிக்கு மேல் கிளம்பியிருப்பேன். செட்டிகுளத்தில் இருந்து பேருந்தை பிடித்து, பெரம்பலூர் வர வேண்டும் என்றால் சரிதான். கடந்த 30 ஆண்டுகளாக நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணியாற்றியிருப்பேன். (விசாரணை முடித்துக் கொள்ளப்பட்டது).

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

***Sd/-***
Judicial Magistrate No.I,
Perambalur.

JMPR